SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I பரீட்சை – ஜூலை 2022

**(Level I Examination - July 2022)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (103) பொருளியல் (ECN)


**இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

இல:540, வென் முருத்துவெட்டுவ ஆனந்த நயிமி மாவத்தை,
நாரஹேன்பிட்ட ,கொழும்பு 05
தொலைபேசி இலக்கம் : 011-2-559669



**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜூலை 2022**

# (103) பொருளியல்

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

(மொத்தம் 40 புள்ளிகள்) **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**1.1** (4)

**1.2** (1)

**1.3** (1)

**1.4** (2)

**1.5** (2)

**1.6** (2)

**1.7** (3)

**1.8** (3)

**1.9** (4)

1.10 (4)

**1.11** திட்டமிட்ட

**1.12** எல்லை உற்பத்தி

**1.13** தவறு

**1.14** சரியானது

### 1.15 உற்பத்தி காரணியான மூலதனத்தின் பண்புகள்

1 மனிதனால் உருவாக்கப்பட்ட உற்பத்தி காரணி
2 இது மெய்ரீதியான நிலைப்பாடு
3 பெறுமானதேய்வு அடையக்கூடியது
4 நீண்டகால பயன்பாட்டினையுடையது
5 மூலதனத்திற்கு வட்டி என்னும் காரணி கொடுப்பனவு வழங்கப்படும்.
6 வினைத்திறன் கொண்டது

**1.16 பற்றாக்குறை பாதீடு** என்பது மொத்த அரசாங்க வருமானத்தினை விட மொத்த செலவீனமானது அதிகமாக காணப்படுவது ஆகும்.

உதாரணம் : பற்றாக்குறை பாதீடு = அரசாங்க வருமானம் - அரசாங்க செலவு
= ரூபா.400 மில்லியன் - ரூபா.470 மில்லியன்
= (ரூபா.70 மில்லியன்)

### 1.17 அரசாங்கத்தால் விலைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதன் காரணங்கள்

1 நுகர்வோரால் நடைமுறையில் உள்ள பண்டத்தின் விலைக்கு ஈடுகொடுக்கமுடியாமை
2 நடைமுறையிலுள்ள பண்டத்தின் நியாமற்ற விலை காரணமாக சந்தையில் குறித்த பண்டத்தின் தட்டுப்பாடு ஏற்படல்
3 அதிகரித்த பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு
4 உற்பத்தியாளனை பாதுகாப்பதற்கு அதாவது உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு நியாயமான விலையினை பெற்றுக்கொள்வதற்கு

SRI LANKA

### 1.18 பணத்தின் கேள்விக்கான காரணங்கள்

1 கொடுக்கல் கொள்வனவு நோக்கம்
2 முன்னெச்சரிக்கை நோக்கம்
3 ஊக நோக்கம்

### 1.19 மொத்த உற்பத்திக்கும் சராசரி உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடு

**மொத்த உற்பத்தி :-** அதிகரிக்கும் மாறும் காரணியின் அளவை நிலையான காரணியுடன் சேர்க்கும் போது கொடுக்கப்பட்ட காலத்தில் கிடைக்கப்பெறும் மொத்த வெளியீடுகள் மொத்த உற்பத்தி ஆகும்.

**சராசரி உற்பத்தி** :- மொத்த வெளியீட்டில் மாறும் காரணி உள்ளீடுகளில் ஒரு அலகு மாறும் காரணிக்காக வெளியீட்டின் அளவு சராசரி உற்பத்தி ஆகும். இதனை மொத்த செலவினை மொத்த மாறும் காரணிகளின் உள்ளீடுகள் மூலம் பிரிப்பதன் மூலம் பெறப்படும்.

$$\text{சராசரி உற்பத்தி} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{மாறும் காரணிகளின் உள்ளீட்டு}}$$

**1.20 மனித அபிவிருத்தி வரைவாகத்தில் உள்ள உருப்படிகள்**

1 வருமானம்

2 கல்வி

3 சுகாதாரம்

4 அரச தலையீட்டு சுதந்திரம்

5 ஆரோக்கியமான சமூக உறவுகள்

6 சமநிலைத்துவம்

7 சக்தி

***(02 புள்ளிகள் வீதம் , மொத்தம் 40 புள்ளிகள்)***

*பகுதி* **A** *முற்றும்*

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 01 - வணிக சூழல் தொடர்பான பொருளாதார கருத்துக்கள் மற்றும் அமைப்புக்கள்***

**(a)**

**அமையச்செலவு** என்பது பொருளாதார ரீதியான முடிவுகளை எடுக்கும் போது அமையச்செலவானது ஒரு முக்கியமான எண்ணக்கருவாகும். பல்வேறு மாற்றுத்தெரிவுகள் உள்ள நிலையில் ஒரு அதிசிறந்த தெரிவினை மேற்கொள்ளும் போது அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த மாற்றுத்தெரிவின் பெறுமதி அமையச்செலவாகும்.

**உதாரணம் :-** அமல் ரூபா.100,000/- முதலீடு செய்து வியாபாரம் ஒன்றினை செய்வதற்கு அவரது நீண்ட கால வைப்பு கணக்கிலிருந்து தொகையினை எடுத்து முதலீடு செய்தார். இங்கு அமலுக்கு கிடைக்கும் வைப்பு தொகை வட்டியானது முதலீட்டு மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்திற்கு எதிரான அமையச்செலவாக கருதப்படும்.

**உதாரணம் 2 :-**

மாணவன் ஒருவன் தான் படத்திற்கு போவதற்கு வாங்கிய சீட்டுதுண்டினை ரூபா.2500 வினை அவரது வகுப்பு கட்டணமாக செலுத்தியபடியால் இங்கு படத்திற்கு போவதற்கான வாய்ப்பானது அமையச்செலவாக கருதப்படுகின்றது.

***(03 புள்ளிகள்)***

**(b)**

**<u>எதனை ? எந்தளவு உற்பத்தி செய்தல்?</u>**

தனியார்துறை இலாப நோக்கத்தினை அடிப்படையாக அதிக விலையினை தீர்மானிக்கும் அதே நேரம் அரசு துறை மக்களின் சமூக நலன் கருதி விலை தீர்மானத்தில் வரிகள் மற்றும் மானியம் வழங்குதல் மூலம் தலையீடு செய்து நேரடியாகவோ மறைமுகமாகவோ விலைகட்டுப்பாட்டில் நடவடிக்கை எடுக்கின்றன.

**<u>எவ்வாறு உற்பத்தி செய்தல்?</u>**

தனியார் துறையானது இலாபகரமான மற்றும் குறைந்த கிரயத்தினை உடைய தொழிநுட்ப முறையினை பயன்படுத்தும் மற்றும் அரசாங்க துறையானது அதி உயர்வான சமூக நலன்களை அடிப்படையாக கொண்ட தொழிநுட்ப நடவடிக்கைகளை பயன்படுத்துவதன் மூலம் தொழிநுட்ப நுணுக்கங்களை பயன்படுத்துகின்றன.

**<u>யாருக்காக உற்பத்தி செய்தல்?</u>**

கலப்பு பொருளாதாரத்தில் இவ் பிரச்சனையானது மக்களின் கொள்வனவு சக்தியின் அடிப்படையில் அரசாங்கத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. கலப்பு பொருளாதாரத்தின் அடிப்படையின் அரசுதுறை மானியம் மற்றும் வரிகள் மூலம் மக்களின் கொள்வனவு சக்தியின் இயலுமையினை வளங்களின் மூலம் தீர்மானிக்கின்றது.
உதாரணமாக சொத்துக்கள் மீதான வரிகள் மற்றும் மானியம் வழங்கல் மற்றும் சமூக நல திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

***(04 புள்ளிகள்)***

**(c) தனியுரிமை சந்தையின் பண்புகள்**

1 குறித்த தொழிலில் ஒரே நிறுவனம் மட்டும் காணப்படும். அதனால் போட்டி மற்றும் விளம்பரம் காணப்படமாட்டாது
2 புதிய பொருட்களை அறிமுகப்படுத்தப்படும் போது மட்டும் விளம்பரம் இடம்பெறும்
3 உற்பத்தி பொருட்களானது மிகவும் சிறப்பு தன்மை வாய்ந்ததாக காணப்படும் அதாவது இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு பிரதியீடுகள் காணப்படாது.
4 பிரவேச தடைகள் காணப்படல்
5 அதியுச்ச இலாப நோக்கம்
6 விலை தீர்மானிப்பாளர்கள்
7 சந்தை தகவல்கள் பூரணமற்றதாக காணப்படுதல் செலவுகளின்றி தகவல்களை பெறமுடியாதிருத்தல்

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

*அத்தியாயம் 02 - கேள்வி நிரம்பல் சந்தை சமநிலை மற்றும் அரச தலையீடு*

**(a)**

**(i)** Qd = 1600 -5P
Qs = -800 + 3P

**Qd = Qs** **(சந்தை சமநிலையில்)**

1600 -5P = -800 +3P

1600+800 = 5P + 3P

2400 = 8P

**300 = P**

aat SRI LANKA

**கேள்வி சமன்பாட்டில் பிரதியீடு செய்தல்**

Qd = 1600 – 5P

= 1600 –(5 x300)
= 1600 -1500
= **100 அலகுகள்**

அல்லது

**நிரம்பல் சமன்பாட்டில் பிரதியீடு செய்தல்**

QS = -800 + 3P

= -800 + (3x 300)
= -800 + 900
= **100 அலகுகள்**

**சந்தை சமநிலை விலை = ரூபா.300**

**சந்தை சமநிலை அலகுகள் = 100 அலகுகள்**

*(04 புள்ளிகள்)*

**(ii)**

**நுகர்வோன் மிகை சமநிலை** = $\dfrac{\left[\text{பண்டத்தின் அதிவுயர்ந்த விற்பனை விலை} - \text{சமநிலை விலை}\right] \times \text{சமநிலை அலகுகள்}}{2}$

= $\dfrac{(320-300) \times 100}{2}$

= <u>ரூபா. 1000</u>

***செய்கை - சந்தையில் விற்க கூடிய பண்டத்தின் அதிவுயர் விலை***

Qd = 1600 -5P ⟶ கேள்வி சமன்பாட்டில் பூச்சியத்தை பிரதியீடாக செய்தல்

0 = 1600- 5P

5 P = 1600

<u>P = 320</u>


*(02 புள்ளிகள்)*

**(b)**

குறைந்த பட்ச விலையினை நிர்ணயிப்பதனால் உற்பத்தியாளனை சாதாரண முறையில் பாதுகாக்க முடியும் என்பதுடன் நியாமான விலையினை உற்பத்தியாளனுக்கு பெற்றுத்தர முடியும்.ஆனால் உயர் விலை நிர்ணயிப்பதன் மூலம் சந்தையில் மிகை நிரம்பல் உண்டாகி அது சந்தை சமநிலையை பாதிப்பதுடன் அத்துடன் முறையற்ற பாதீடு மற்றும் பொருளாதாரத்தில் வளப்பற்றாக்குறை பங்கீட்டை முறையாக கையாளுவதன் மூலம் மிகை நிரம்பலினை மட்டுபடுத்த முடியும் ஆகையால் .பின்வரும் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுகின்றன.

- மிகையுற்பத்தியினை அரசு வாங்கி அதனை இருப்பு கொள்ளளவாக மாற்றுகிறது.
- உற்பத்தியாளருக்கு மிகை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு அறிவுறுத்துதல்
- உற்பத்தியாளருக்கு மிகையுற்பத்தி மூலம் பிரதியீட்டு பொருட்களை உற்பத்தி செய்ய ஊக்குவித்தல்

நடுநிலை விலையில் மிகையுற்பத்தியினை சிறிய நடுத்தர கைதொழிலாளருக்கு விற்பனை செய்தல்.




Excess Supply -மிகை நிரம்பல்
Market supply -சந்தை நிரம்பல்
Minimum Price – சந்தை விலை
Market Demand – சந்தை கேள்வி

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA


## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

| *அத்தியாயம் 05 - நிதியில் முறைமை , பணம் மற்றும் பொது விலைமட்டம்* |
|---|

**(a) கேள்வி உதைப்பு பணவீக்கம் மற்றும் கிரயத்தள்ளல் பணவீக்கம் என்பனவற்றுக்கான வேறுபாடுகள்**

**கேள்வி உதைப்பு பணவீக்கம்**

ஒரு பொருளாதாரத்தில் மொத்த கேள்வியும் அதன் மொத்த நிரம்பலினை விட அதிகமாக இருக்கம் போது ஏற்படும் பணவீக்கமாகும். ஆதாவது நுகர்வோனின மொத்த உற்பத்தியானது நுகர்வோன் கேள்வியை திருப்திபடுத்த முடியாத போது அதிக விலைகள் விரைவாக பின்தொடரப்படும். மேலும் கேள்வி உதைப்பு பணவீக்கமானது பணநிரம்பலை அதிகரிப்பதோடு அரசு மற்றும் தனியார் செலவுகளை அதிகரிக்கும் மற்றும் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கும். அத்துடன் இந்த பணவீக்கத்தினால் மிகைப்படுத்திய வளர்ச்சி மற்றும் அதிகப்படுத்திய கேள்வி மற்றும் பணவீக்க இடைவெளி உருவாகும்.





| Price level – விலை மட்டம் |
|---|
| Real output – மெய் வெளியீடு |

**கிரயதன்மை பணவீக்கம்**

அதாவது உள்ளீடுகளின் விலை அதிகரிப்பால் பொருட்களின் விலைகள் மேல்நோக்கி இழுக்கப்படும் சூழ்நிலை ஆகும். இறக்குமதி விலைகளின் அதிகரிப்பு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர் நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்த ஊழியர் செலவு மற்றும் சிலருரிமை சந்தை அமைப்புகளின் தொழிற்பாடுகள் காரணமாக உள்ளீட்டின் விலை உயரும் இந்த உற்பத்தி செலவு அதிகரிப்பு அதற்கான மொத்த நிரம்பல் வளையினை இடதுபுறம் நகர்த்தும்.அதற்கான காரணங்கள்

- பொருளாதாரத்தில் காணப்படும் தினக்கூலியின் அளவு அல்லது வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
- பொருளாாரத்தில் வட்டி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
- பொருளாதாரத்தில் மூலப்பொருள் மற்றும் உள்ளீடுகளின் விலை அதிகரிப்பு
- இறக்குமதிகளின் விலை அதிகரிப்பு




Price level – விலை மட்டம்

Real output – மெய் வெளியீடு

*(04 புள்ளிகள்)*

**(b) இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கையின் தரம்சார்ந்த கட்டுப்பாடுகள்**

1. கடன்களுக்கான அதிகபட்ச முதிர்வு காலத்தினை நிறுவுதல்
2. முன்னுரிமை வட்டி வீதங்களை விதித்தல்
3. கடன் உத்தரவாதங்களுக்கான வரையறைகளை அமைத்தல்
4. முதலீடுகள் மற்றும் கடன்களுக்கான வரையறைகளை அமைத்தல்
5. காசு மீதிகளுக்கு வரையறைகளை அமைத்தல்
6. நேரடி கட்டுப்பாடுகளை அமைத்தல்
7. வர்த்தக வங்கி கடன்களுக்கான வரையறைகளை அமைத்தல்

*(02 புள்ளிகள்)*

**(c) நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியே வருவதற்கான வழிகள்**

மத்தியவங்கியானது பொருளாதாரத்தில் நாணய நிரம்பல் , தற்போது சந்தையில் காணப்படும் காசு மற்றும் நாணய கிரயத்தின் வட்டி விகிதம் போன்ற பேரின பொருளாதாரத்தின் நோக்கங்கள் மூலம் பொருளாதாரத்தினை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்லுதல் இதன் மூலம் நாணய நிரம்பல் வீதம் மற்றும் வட்டி வீதம் என்பனவற்றை இலக்கு செய்தல்.

பேரின பொருளாதாரத்தில் பொருளாதாரத்தினை நிலையானதாக பேணுவதற்கு நாணயக்கொள்கையானது முக்கியமாக கருதப்படுவதுடன் பொருளாதார மத்திமத்திற்கு வழிவகுகின்றன. மாறும் நாணயக்கொள்கையானது கேள்வி மற்றும் வெளியீடுகளில் தங்கியுள்ளது. மத்திய வங்கி தரம்சார்ந்த கொள்கை நடைமுறை மூலம் இந்த நெருக்கடியினை எதிர் கொள்ளுகின்றன.

➢ **<u>அளவுக்கட்டுப்பாட்டு கருவிகள்</u>**

**1. வங்கி வீத கொள்கை**

ஓரு நாட்டின் மத்திய வங்கி அந்நாட்டின் வணிய வங்கிகளுக்கு கடன்களை வழங்கும் குறைந்தபட்ச வீதம் இதுவாகும் வங்கி வீதத்தில் ஏற்படுத்தப்போகும் மாற்றங்கள் மூலம் வணிய வங்கிகள் கடன் உருவாக்கத்தின் மத்திய வங்கி தாக்கம் செலுத்தும்.

உதாரணமாக மத்திய வங்கி வீதத்தினை உயர்த்தும் போது மத்திய வங்கியிடமிருந்து வணிக வங்கிகள் கடன் பெறுவதற்கான கிரயம் உயரும் இது வணிக வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து கடன் கொள்வனவு செய்வதை ஊக்கமிழக்க செய்யும். மேலும் வங்கி வீதத்தினை உயர்த்தும் போது வணிக வங்கிகளும் அவர்களின் கடன்வீதங்களை அதிகமாக்கும் போது வணிகர்கள் தொழிலதிபர்கள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களால் வணிக வங்கிகளிடமிருந்து கடன்பெற ஊக்கமளிப்பர். இது கடனாக்கத்தை குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தின் பணநிரம்பலை குறைக்கும்.
வைப்புகளுக்கு அதிக வட்டிவீதம் காரணமாக மக்கள் சேமிக்க ஆர்வம் காட்டுவர்

**2. திறந்த சந்தை தொழிற்பாடுகள்**

கடன்கட்டுப்பாட்டின் மற்றுமொரு முக்கிய சாதனமாகும் இது திறந்த சந்தையின் அதிகப்படியான திரவதன்மையை உறிஞ்சுவதற்கு அல்லது உள்ளீடு செய்வதற்கு மத்திய பத்திரங்களை கொள்வனவு அல்லது விற்பனை செய்வது இதன் கருத்தாகும்
மத்திய வங்கியின் பத்திரங்களைவ விற்பனை செய்வது கடமைகளை சுருக்குவதற்கும் பத்திரங்களை விற்பனை செய்வது கடனளவில் விரிவாக்கத்திற்கு வழிவகுக்கும்.

**3. ஒதுக்க வீத கொள்கை**

வணிக வங்கிகளின் கையில் அல்லது மத்திய வங்கியில் பண வடிவத்தில் பண மீதிகளாய் பேணப்படும் வணிக வங்கிகளின் வீதமாகும். இவ் ஒதுக்க வீதத்தின் அதிகரிப்பு அல்லது குறைப்பு பணநிரம்பலில் அதிகரிப்பு மற்றும் குறைப்பினை ஏற்படுத்தம்

➢ **<u>தரம்சார்ந்த கட்டுப்பாடுகள்</u>**

1. கடன்களுக்கான அதிகபட்ச முதிர்வு காலத்தினை நிறுவுதல்
2. முன்னுரிமை வட்டி வீதங்களை விதித்தல்
3. கடன் உத்தரவாதங்களுக்கான வரையறைகளை அமைத்தல்
4. முதலீடுகள் மற்றும் கடன்களுக்கான வரையறைகளை அமைத்தல்
5. காசு மீதிகளுக்கு வரையறைகளை அமைத்தல்
6. நேரடி கட்டுப்பாடுகளை அமைத்தல்
7. வர்த்தக வங்கி கடன்களுக்குகான வரையறைகளை அமைத்தல

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

*அத்தியாயம் 06 - சர்வதேச வர்த்தகம் மற்றும் நாணயமாற்று சந்தை*

**(a)**

| | அமையச்செலவு- அரிசி | அமையச்செலவு கோதுமை |
|---|---|---|
| X | 3/6 =0.5 | 6/3 = 2 |
| Y | 4/2 = 2 | 2/4= 0.5 |

நாடு X அரிசி உற்பத்தி இலாபகரமானதாகவும் நாடு Y கோதுமை உற்பத்தி இலாபகரமானதாகவும் அமையும்

*(04 புள்ளிகள்)*

**(b) அமெரிக்க டொலருக்கெதிரான எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பிறக்கத்திற்கான காரணங்கள்**

1. நிலையான நாணயமாற்று வீதத்தினை நீண்டகாலமாக வைத்திருந்தமை
2. இறக்குமதி வருமானம் மற்றும் இறக்குமதி செலவீனத்திற்கான இடையே காணப்படும் இடைவெளி
3. பணவீக்கத்திற்கு குறைவான வட்டிவீதத்தினை நடைமுறையில் வைத்திருந்தமை
4. அதிகரித்த வெளிநாட்டு கடன்களும் மற்றும் சென்மதி நிலுவை அதிகரித்தமை
5. கோவிட் 19 காரணமாக வெளிநாட்டு வருவாய்கள் குறைந்தமை
6. கோவிட்19 காரணமாக சுற்றுலா துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி
7. ஏற்றுமதி அபிவிருத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி
8. வெளிநாட்டு முதலீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி
9. சில அரசியல்தலையீடுகள் மற்றும் பொருளாதார காரணங்கள்
10. நாட்டிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் மீளப்பெறப்படுவதுடன் குறைந்தளவிலான முதலீடு உட்பாய்ச்சப்படுதல்.
11. நாட்டின் அரசியல் பொருளாதார நிலைமைகளின் காரணமாக அதிகளவு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளதுடன் எமது நாட்டு நாணயமும் பெறுமதியிழந்துள்ளது.

*(04 புள்ளிகள்)*

**(c) சர்வதேச வர்த்தகத்தின் அனுகூலங்கள்**

1. பொருளாதார வளர்ச்சின் முடுக்கம்
2. சர்வதேச பொருளாதார ஓத்துழைப்பின் வளர்ச்சி
3. வெளிநாட்டு தொழில்நுட்பம் உள்நாட்டிற்கு வருதல்
4. ஒரு நாடு தனது மிகை உற்பத்தியை ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்தல்
5. வளங்களை வினைதிறனாகவும் வினைதிறனாகவும் பயன்படுத்ததல்
6. நாட்டின் வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்
7. தரமான பொருட்களை குறைந்த விலைக்கு பெற முடிதல்
8. அரச வரிவருவாய் அதிகரித்தல்
9. தொழில்நுட்பம் மற்றும் அறிவினை பகிர்ந்து கொள்ளல்
10. சர்வதேச நிறுவனங்களுடன் வர்த்தகங்களை மேற்கொள்வதால் அரசியல் சமூக மற்றும் கலாச்சார ரீதியாக பொருளாதாரமற்ற நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

பகுதி **B** நிறைவு

aat SRI LANKA

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

*அத்தியாயம் 04 - தேசிய கணக்கீடு மற்றும் அரசின் வகிபாகம்*

**(A)**

**(a)**

**(i) மொத்த பெறுமதி சேர்த்தல் அடிப்படைவிலையில்**

| | ரூபா. மில்லியன் |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடுகள் | 1,000 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 1,400 |
| கலப்பு வருமானம் | 1,200 |
| ஏனைய வரிகள் மற்றும் உற்பத்தி மீதான மானியங்கள் | 750 |
| **மொத்த பெறுமதி சேர்த்தல் அடிப்படை விலையில்** | **4,350** |

*(05 புள்ளிகள்)*

**(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை விலையில்**

| | ரூபா. மில்லியன் |
|---|---|
| மொத்த பெறுமதி சேர்த்தல் அடிப்படை விலையில் | 4,350 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான நிகர வரிகள் | 500 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை விலையில்** | **4,850** |

*(02 புள்ளிகள்)*

**(iii) மொத்த தேசிய வருமானம் - சந்தை விலையில்**

| | | ரூபா. மில்லியன் |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை விலையில் | | 4,850 |
| தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம் | | |
| வெளிநாட்டு முதன்மை வருமான பெறுவனவுகள் | 1,200 | |
| வெளிநாட்டு முதன்மை வருமான கொடுப்பனவுகள் | (1,500) | 300 |
| **மொத்த தேசிய வருமானம் - சந்தை விலையில்** | | **4,550** |

*(03 புள்ளிகள்)*

**(b) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடங்காத நடவடிக்கைகள்**

1. கல்வி மற்றும் களிப்பாட்டம்
2. இலவசமாக கிடைக்கப்பெற்ற வளங்கள் ( நிலம் நீர் காற்று)
3. கட்டப்படாத உள்நாட்டு கட்டணங்கள்
4. மனிதால் உருவாக்கப்படாத இயற்கை வளங்கள் (காடுகள்)
5. வளங்களின் விலையில் ஏற்பட்ட விலை மாற்றல்கள் மற்றும் இயற்கை வளர்ச்சி

*(03 புள்ளிகள்)*

**(B) நியாய பகிர்வு மற்றும் பூரண தொழில் பகிர்வுக்கான வேறுபாடுகள்**

**நியாய பகிர்வு** என்பது அதாவதது எல்லா மக்களிடையே நியாமான மட்டத்திலான வருமான பங்கீடு செய்தலை குறிக்கும். அதாவது நாட்டிலுள்ள அனைவருக்கும் சமனான முறையில வருமான பங்கீட்டினை மேற்கொள்ளல். இதனால் அனைத்து மக்களும் தங்களது தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

**பூரண தொழில் பகிர்வு** என்பது நாட்டிலுள்ள எல்லா வளங்களின் அதியுச்ச பயன்பாட்டினை பயன்படுத்தி பூரண தொழில் மட்டத்தினை பயன்படுத்தி வருமான பகிர்வை மேற்கொள்ளல். இங்கு தொழில்வாய்ப்புகளை உருவாக்கி வேலைவாய்பின்மையை குறைக்க நடவடிக்கை எடுத்தல்

***(04 பள்ளிகள்)***

***அத்தியாயம் 07 - பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் பொருளியல் போக்குகள்***

**(C) பொருளாதார வளர்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள்**

1. **காரணி கட்டளைகள்**
   பௌதீக மூலதனம்
   மனித மூலதனம்
   இயற்கை மூலதனம்
   சமூக மூலதனம்

2. **உற்பத்தி திறன்**
   தொழிநுட்பம்
   புதுமை படைத்தல்
   ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முதலீடு

3. **பொருளாதார நிலைத்த தன்மை**
4. **அரசியல் நிலைத்த தன்மை**
5. **நல்லாட்சி**
6. **சலுகைகள்**

***(03 பள்ளிகள்)***

***(மொத்தம் 20 புள்ளிகள்)***

***பகுதி C நிறைவு.***

aat SRI LANKA

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*